# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,186 — 1960 අගෝස්තු 26 වැනි සිකුරාදා — 26.8.1960

12,186 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 211 | அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனை ள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | 214 | நாணுவிதம் .. .. .. | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### மதுவரிப் பகுதி

#### சாராயமும் மற்றும் பொருட்களும் கொண்டு செல்லல்

1961 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ந் திகதி தொடக்கம் ஒரு வருட காலத்திற்கு வவுனியாவிலுள்ள சாராயக்குதத்திற்கும் புகையிரதப் பகுதிப் பண்டசாலைக்கும் இடையே சாராயமும் மற்றும் பொருட்களும் கொண்டு செல்வதற்கு கேள்விப் பத்திரங்களை 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27 ந் திகதி நண்பகல் 12 மணிவரை யாழ்ப் பாணம் வடபகுதி உதவி மதுவரி அதிகாரி பெற்றுக்கொள்ளுவார்.

2. ஓர் கச்சேரியில் இதற்கென ரூபா 10 கொடுத்துப் பெற்ற றசித்தைக் காட்டி மேற்படி உதவி மதுவரி அதிகாரியிடம் பெறக்கூடிய பத்திரங் களிலேயே விண்ணப்பிக்க வேண்டும்.

3. இந்த விஷயத்தைப்பற்றி மேலும் விபரங்களை மேற்படி உதவி மதுவரி அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ரி. பி. வடுகொடபிற்றியா,
மதுவரி அதிகாரி.

மதுவரி அதிகாரியின் கந்தோர், கொழும்பு,
1960 ம் ஆண்டு ஆவணி மாதம் 19 ந் திகதி.

---

### நீர்ப்பாசன இலாகா

கொழும்பு 8, கொட்டா வீதியிலுள்ள மேற்குப் பகுதிப் பெரும்பாகப் பொறியியலாளர், கீழ்க்காணும் வேலைகள் செய்வதற்கான கேள்விப் பத்திரங்களை நீர்ப்பாசன இலாகாவிற் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் களிடமிருந்து 20.9.1960 செவ்வாய்க்கிழமை மு.ப. 11.30 மணிவரையும் ஏற்றுக்கொள்வார்.

| வேலையின் பெயர் | பதிவுத் தொகை |
|---|---|
| (1) கெற்றிகே ஓயா அணைக்கட்டு வேலை .. | ரூபா 9,000 மும் அதற்கு மேலும். |
| (2) புஸ்வெலி ஆற்றின் குறுக்கே அணைக் கட்டு வேலை | ரூபா 23,500 உம் அதற்கு மேலும். |
| (3) 1960/61 ல் கொழும்பு உப பகுதிக்குச் சேர்ந்த பொருட்களை வேலைத்தளங் களுக்குக் கொண்டு செல்லுதல் | ரூபா 25,000 மும் அதற்கு மேலும் |

இதையிட்டு எல்லா விபரங்களையும் படங்களையும் அத்தோடு இதற்கு வேண்டிய கேள்விப்பத்திரங்களையும் கீழ்க்காணும் காரியஸ்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்களை இணைப் பிரதிகளுடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

நீர்ப்பாசன இலாகாவில் அல்லது கச்சேரியில் ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 25.00 கட்டிப் பற்றுச் சீட்டுப் பெற்று தாம் பதிவு செய்யப்பட்டவ ரென அத்தாட்சிப்படுத்தும் ஒப்பந்தக்காரர்களுக்குக் கேள்விப்பத்திரங்கள் 17.9.60 சனிக்கிழமை வரையும் அலுவலக வேலை நேரங்களில் வழங்கப் படும். தற்பொழுது அரசாங்கத்தின்கீழ் ஒப்பந்த வேலைகள் செய்யும் ஒப்பந்தக்காரர்கள், தங்கள் வேலைகள் திருப்தியாக முன்னேறுகின்றன வென அத்தாட்சிப் பத்திரங்கள் அவ்வேலை மேற்பார்வையாளர் களிடமிருந்து பெற்று அவற்றையும் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப் பிக்கும்பொழுது அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்களை நிராகரிக்க அல்லது அவற்றில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அதிகாரம் அரசாங்கத்தின் பிரத்தியேக உரிமை.

எப். ஏ. லோபோ,
நீர்ப்பாசன அதிகாரி,
கொழும்பு உப பகுதி.

வேலுவன வீதி,
கொழும்பு 9.
16.8.60

---

### நீர்ப்பாசன இலாகா

கொட்டா ரோட், கொழும்பு 8 ல் உள்ள மேல் பகுதி பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர், நீர்ப்பாசன இலாகா தலைமைக் காரியா லயத்தில் (யாவத்தை) சுற்றுமதில் கட்டுவதற்கும், கதவுகள் பொருத்து வதற்கும், நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 19,000 அல்லது கூடிய தொகைக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 20.9.60 செவ்வாய்க்கிழமை மு.ப. 11.30 மணிவரை மெழுகு முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

யாவத்தை ரோட், கொழும்பு 5 ல் உள்ள கட்டிட உப பகுதி நீர்ப்பாசன பொறியியலாளரிடமிருந்து பெறப்படும் விண்ணப்பப் பத்திரங் களில் இணைப்பிரதிகள் மூலம் விண்ணப்பம் செய்யப்படவேண்டும். இவ் வேலைக்குரிய மாதிரிப்படங்களைப் பார்வையிடவும், மற்றும் விபரங்களை அறிந்துகொள்ளவும் முடியும்.

கேள்விப் பத்திரங்களைக் கட்டிட உப பகுதி நீர்ப்பாசன பொறியியலாள ரிடம் 16.9.60 வெள்ளிக்கிழமைவரை அலுவலக வேலை நேரங்களில் நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 19,000 அல்லது கூடிய தொகைக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளவர்களென அத்தாட்சியுடைய ஒப்பந்தக்காரர்கள் கச்சேரியில் அல்லது யாவத்தை ரோட், கொழும்பு 5 ல் உள்ள கட்டிட உபபகுதிக் காரியாலயத்தில் ரூபா 25.00 முற்பணம் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

அரசாங்கத்திற்கு எவ்வித கேள்வியுமின்றி கேள்விப் பத்திரத்தை முற்றாக அல்லது பகுதியை மட்டும் நிராகரிக்கவும், ஏற்றுக்கொள்ளவும் உரிமை உண்டு.

விண்ணப்பதாரிகள் தற்பொழுது ஏதாவது வேலை ஒப்பந்தமுடைய வர்களாயிருப்பின் அவர்கள் தாங்கள் செய்யும் வேலை திருப்திகரமாக நடைபெறுகிறதென்று சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளிடமிருந்து அத் தாட்சிப்பத்திரம் பெற்றுத் தங்கள் விண்ணப்பப் பத்திரத்துடன் சமர்ப் பித்தல் வேண்டும்.

வி. குமாரசாமி,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
கட்டிட உப பகுதி.

நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலயம்,
யாவத்தை ரோட், கொழும்பு 5.

## நீர்ப்பாசன பகுதி

கண்டிப் பகுதியில் இருக்கும் வேலைத்தலங்களுக்கு பண்டம் ஏற்றியிறக்குவதற்கு இப்பகுதியில் ரூபா 10,000 க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட கொந்திருத்துக்காரர்களிடமிருந்து கண்டி பழைய கச்சேரியில் இருக்கும் மத்திய பகுதிப் பெரும்பாக இஞ்சினியரால் புதன்கிழமை 21 ந் திகதி புரட்டாதி மாதம் 1960 ம் ஆண்டு நண்பகல் 10 மணிவரைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. நீர்ப்பாசன இலாகாவின் கண்டி அதிகாரியிடம் பெற்றுக்கொள்ளும் கேள்விப்பத்திரங்களைப் பூர்த்திசெய்து இரு பிரதிகளில் அனுப்ப வேண்டும்.

3. அரசாங்கத்தில் தற்போது வேலைசெய்துகொண்டிருக்கும் கொந்திருத்துக்காரர் தாங்கள் செய்யும் வேலைகளின் தொகையையும் திருப்திகரமாக வேலை நடைபெறுவது என்றும் அவ்வேலைப் பகுதி அதிபரிடமிருந்து அத்தாட்சிப்பத்திரம் அனைக்கவேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் கண்டி நீர்ப்பாசன இலாகாவின் அதிகாரியிடம் ஞாயிற்றுக்கிழமைகளும் விடுமுறை நாட்களும் தவிர ஏனைய நாட்களில் 25.8.60 தொடக்கம் 19.9.60 நண்பகல் ரூபா 25 கட்டியதற்கு அத்தாட்சி காட்டுபவருக்கு வழங்கப்படும். காசு கண்டி நீர்ப்பாசன அதிகாரியிடம் அல்லது எக்கச்சேரியிலாகுதல் கட்டலாம்.

5. கேள்விப் பத்திரம் குறைந்தது ஒரு லொறி வாகனம் சொந்தமாயுள்ள கொந்திருத்துக்காரருக்கு மட்டுமே கொடுக்கப்படும். கொந்திருத்துக்காரர் நீர்ப்பாசன இலாகா கண்டி அதிகாரியிடம் வாகனங்களின் உரிமைக்குப் பதிவைக் காட்டிய பின்னரே கேள்விப்பத்திரங்கள் பெறுவர்.

சி. த. கந்தையா,
நீர்ப்பாசன பொறியியலாளர், கண்டி.

1960 ம் ஆண்டு ஒகஸ்ற் மீ 5 ந் உ.

---

### நீர்ப்பாசன இலாகா—நிஸ்ஸமாரு உப-பகுதி

பெரும்பகுதி-நீர்ப்பாசன இஞ்சினியர் (தங்காலை) அவர்களால் 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 13 ந் திகதி காலை 10 மணிவரைக்கும் திஸ்ஸமாரு உப-பகுதியில் சாமான்களை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் உரிய கேள்விப் பத்திரங்கள் இந்த இலாகாவில் ரூபா 5,000/- மேல் பதிவு செய்யப்பட்ட கொந்திருத்துகாரர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

திஸ்ஸமாரு உப-பகுதி நீர்ப்பாசன உத்தியோகத்தரிடமிருந்து பெற்ற இரண்டு மனுப்பத்திரங்களில் விண்ணப்பிக்க வேண்டும்.

நீர்ப்பாசன இலாகாவில் பதிவு செய்யப்பட்டவர்கள் என்ற அத்தாட்சியுடன் ரூபா 25 ற்கு கச்சேரி பற்றுச்சீட்டோ அல்லது நீர்ப்பாசன துறைத் தலைவரின் பெயரில் எடுக்கப்பட்ட மணிஓடரோ கொடுப்பவர்களுக்கு மாத்திரம் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். கேள்விப் பத்திரங்கள் வழங்கும் திகதி 5.9.60 ல் இருந்து 9.9.60 வரைக்கும்.

ஐ. டி. லிமா,
உப-பகுதி நீர்ப்பாசன உத்தியோகத்தர்,
திஸ்ஸமாரு உப-பகுதி.

நீர்ப்பாசன கந்தோர், திஸ்ஸமாரு,
1960 ம் ஆண்டு ஒகஸ்டு மீ 15 ந் உ.

---

## நீர்ப்பாசன பகுதி

கந்தளாய் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் " கல்மட்டியா குளத்தில் 3 அடி குறுக்களவுள்ள பைப் சலூஸ் " அமைப்பதற்கு, இப்பகுதியில் ரூபா இருபதினாயிரம் அல்லது அதற்கு மேற்பட்ட தொகைகளிற்குப் பதிவு செய்யப்பட்டுள்ள பொருத்தக்காரர்களிடமிருந்து திருகோணமலை பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினீயர் அவர்கள் 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 13 ந் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிவரை கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வார்.

கந்தளாய்த் திட்ட நீர்ப்பாசன இஞ்சினீயர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் கேள்விப் பத்திரங்களைப் பூர்த்தி செய்து பிரதியுடன் அனுப்பிவைக்க வேண்டும்.

அரசாங்கத்தில் தற்சமயம் வேலை செய்யும் பொருத்தக்காரர்கள் தாங்கள் செய்து கொண்டிருக்கும் வேலைகளின் பெறுமதிகளையும், திருப்திகரமாக வேலைகள் நடைபெறுகின்றன என்பதற்கும், ஒவ்வோர் வேலைகட்கும் அவ்வப்பகுதி அதிபர்களிடமிருந்து அத்தாட்சிப் பத்திரங்கள் அணைக்கப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள், எந்தக் கச்சேரிகளிலோ அல்லது கந்தளாய் திட்ட இஞ்சினீயரிடமோ, ரூபா 25 (இருபத்தி ஐந்து) கட்டி அதற்குரிய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கும் பொருத்தக்காரர்களுக்கு, கந்தளாய்த் திட்ட நீர்ப்பாசன இஞ்சினீயர் அவர்கள் 1.9.60 முதல் 10.9.60 வரை வழங்குவார்.

நீர்ப்பாசன இஞ்சினீயர்,
கந்தளாய்த் திட்டம்.

கந்தளாய்,
1960 ம் ஆண்டு ஆகஸ்டு மீ 16 ந் உ.

---

## நீர்ப்பாசன பகுதி

கந்தளாயிலிருக்கும் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ், கீழே குறிக்கப்பட்டுள்ள வேலைகள் செய்வதற்கு, இப்பகுதியில் ரூபா இருபதினாயிரம் அல்லது அதற்கு மேற்பட்ட தொகைகளுக்கு பதிவு செய்யப்பட்டு, யந்திரங்கள் வைத்திருக்கும், பொருத்தக்காரர்களிடமிருந்து திருகோணமலை பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியர் அவர்கள் 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 13 ந் திகதி, செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்வார்.

### வேலை விபரம்

(அ) நெற்பயிர்ச் செய்கைக் காணிகள் சமப்படுத்துதல்—முள்ளிப்பொத்தானை

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஷை | ஷை | வெண்டரசன் ஆறு |
| (இ) | ஷை | ஷை | பேர் ஆறு |

கந்தளாய்த்திட்ட நீர்ப்பாசன இஞ்சினீயர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் கேள்விப்பத்திரங்களைப் பூர்த்தி செய்து பிரதியுடன் அனுப்பி வைக்க வேண்டும்.

அரசாங்கத்தில் தற்சமயம் வேலைசெய்யும் பொருத்தக்காரர்கள் தாங்கள் செய்து கொண்டிருக்கும் வேலைகளின் பெறுமதிகளையும், திருப்திகரமாக வேலைகள் நடைபெறுகின்றன என்பதற்கும், ஒவ்வோர் வேலைகட்கும் அவ்வப்பகுதி அதிபர்களிடமிருந்து அத்தாட்சிப் பத்திரங்கள் அணைக்கப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் எந்தக் கச்சேரிகளிலோ அல்லது கந்தளாய்த் திட்ட இஞ்சினீயரிடமோ, தனித்தனியே ஒவ்வோர் வேலைகட்கும் ரூபா ரூபா 25 (இருபத்தி ஐந்து) கட்டி அதற்குரிய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கும் பொருத்தக்காரர்களுக்கு, கந்தளாய்த்திட்ட நீர்ப்பாசன இஞ்சினீயர் அவர்கள் 1.9.60 முதல் 10.9.60 வரை வழங்குவார்.

நீர்ப்பாசன இஞ்சினீயர்,
கந்தளாய்த் திட்டம்.

கந்தளாய்,
1960 ம் ஆண்டு ஆகஸ்டு மீ 16 ந் உ.

---

## நீர்ப்பாசன இலாகா

வட கிழக்குப் பகுதி நீர்ப்பாசன இலாகா இஞ்சினியர் அவர்களால் 1960/61 நிதிவருடத்தில் பொருட்கள் ஏற்றி செல்வதற்குரிய கேள்விகள் 1960 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 14 ம் திகதி மு.ப. 9.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இந்த இலாகாவில் ரூபா 10,000 த்திற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பக்காரர்கள் ரூபா 25 வைப்புப் பணமாக எந்தக் கச்சேரியிலாவது அல்லது மின்னேரிய உப பகுதி நீர்ப்பாசன காரியாலயத்திலாவது பிணைப்பணம் கட்டியதாகக் கிடைக்கும் பற்றுச்சீட்டை இஞ்சினியர் அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

பெறக்கூடிய கேள்விப் பத்திரங்கள் இரட்டைப் பிரதியில் பதிவு செய்து தபால்மூலம் அனுப்பப்படவேண்டும். பதிவு செய்த தபால் மூலம் அனுப்ப விரும்பாத உள்ளூர் விண்ணப்பக்காரர்கள் நேரிலே சீல் பண்ணப்பட்ட கேள்விப் பத்திரங்களை இஞ்சினியர் அவர்களிடம் சமர்ப்பிக்கலாம். கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படும் உறைகளின் மீது, வேலையின் விபரம் வலது கரையில் எழுதல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் மின்னேரிய உப பகுதி நீர்ப்பாசன இஞ்சினியர் அவர்களால் 1960 ம் ஆண்டு ஆவணி மாதம் 27 ம் திகதியிலிருந்து புரட்டாசி மாதம் 10 ம் திகதிவரை வழங்கப்படும்.

எந்தவிதக் கேள்விப் பத்திரங்களையும் ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ இஞ்சினியர் அவர்களுக்கு உரிமை உண்டு.

கேள்விப் பத்திரங்களைத் திறந்து பார்வையிடும்பொழுது விண்ணப்பக்காரர் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர்.

ஜி. எஸ். எம். சொக்மன்,
நீர்ப்பாசன இஞ்சினியர்,
மின்னேரிய உப பகுதி.

## தொழிற் பகுதி

### உபயோகிக்கமுடியாத 20 மோட்டார் வாகனங்களை விலைக்கு வாங்கி எடுத்துச்செல்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் (Tenders)

கொழும்பு 5, கணத்தை வீதிச் சந்தி, வேலையற்றோர் நிவாரண வேலைக் காரியாலயத்திலுள்ள உபயோகிக்கமுடியாத 20 மோட்டார் வாகனங்களை விலைக்கு வாங்கி எடுத்துச் செல்வதற்கு, ஒப்பந்தப் புள்ளிகள் (Tenders) 1960 ம் ஆண்டு செப்றெம்பர் மாதம் 16 ந் திகதி, வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிவரைக்கும் கொழும்பு தொழில், தேசியமயசேவை மந்திரி காரியாலய ஒப்பந்தப்புள்ளிச் சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகளை அனுப்புவதற்கான பத்திரங்களையும், இது விடயம் சம்பந்தமான சகல விபரங்களையும் பின்வரும் விலாசத்தாரிடம் பெற்றுக்கொள்ள வேண்டும் :— பதிற் தொழில் அதிபர், தொழிற் பகுதி, கீழ்வாவித் தெரு, (Lower Lake Road) கொழும்பு 3.

ஒப்பந்தப்புள்ளிகள் 1960 ம் ஆண்டு செப்றெம்பர் மாதம் 16 ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குத் திறந்துபார்க்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் திறந்துபார்க்கப்படும்பொழுது ஒப்பந்தப் புள்ளிக் காரர் பிரசன்னமாயிருக்க விரும்பின் அனுமதிக்கப்படுவர்.

சா. ப. குமாரசிங்க,
பதிற் தொழில் அதிபர்.

தொழிற் பகுதி, கொழும்பு,
1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19 ந் திகதி.

---

## இலங்கை போக்குவரத்துச் சபை

### கேள்விப்பத்திர அறிவித்தல்

கொழும்பு 5, கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்கு வரத்துச்சபை கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1960 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26 ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிவரை பொரலஸ்கமுவ, வெரஹெரையில் 150/200 லைன் தனிப்பட்ட தன்னியக்கத் தொலைப்பன்னி (டெலிபோன்) மாற்று ஒன்று வழங்கி, நிறுவுவதற்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார். மேலதிக விபரங்களுக்கு பொரலஸ்கமுவ, வெரஹெரையிலுள்ள இலங்கை போக்கு வரத்துச்சபையின் பிரதி பிரதம (சிவில்) இஞ்சினியரிடம் விண்ணப்பஞ் செய்யலாம்.

இலங்கை போக்குவரத்துச் சபையால் வழங்கப்படும் கேள்விப்பத் திரங்களில் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அளிக்கப்படும் சாதனங் களுக்கு உள்ளூர் ஏஜென்சி உடையதும், இலங்கையில் அண்ணளவான அளவுள்ள தனிப்பட்ட தன்னியக்கத் தொலைப்பன்னி (டெலியோன்) மாற்றுக்கள் நிறுவியதாக திருப்திகரமான அத்தாட்சியளிக்கக்கூடியது மான தொழில் நிலையங்களுக்கு மாத்திரம் பத்திரங்கள் வழங்கப்படும். மாற்றுறுப்புக்கள் வினியோகிக்கவும், நிறுவியபின் ஒரு வருடகாலத் துக்கு அதைத் தாபரிக்கவும், அதன்பின் அதைத் தாபரிப்பதற்காக இ.போ.ச. வுக்கு ஒரு யந்திரத் தொழிலாளியை (இக்காலத்துக்குள்) மேலதிக செலவின்றிப் பயிற்றவும் உத்தரவாதம் செய்ய வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் செய்யவிருப்பவர்களின் சான்றோலைகள் பரிசோ திப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டு, பொரலஸ்கமுவ, வெரஹெரையிலுள்ள இலங்கை போக்குவரத்துச்சபையின் பிரதி பிரதம (சிவில்) இஞ்சினியர் அவர்களால் அங்கீகரிக்கப்படவேண்டும். அப்படியான சான்றோலைகள் பிரதி பிரதம (சிவில்) இஞ்சினியரால் ஏற்றுக்கொள்ளப்பட்டபின் கொழும்பு 5, கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச்சபையின் பிரதம கணக்காளரிடம் ரொக்கம் ரூபா 200 கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக கட்டி அவர் கொடுக்கும் பற்றுச்சீட்டை பிரதி பிரதம (சிவில்) இஞ்சினியரிடம் 1960 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22 ம் திகதி நண்பகல் 12 மணிக்குமுன் காட்டுவதன்பேரில் தேவையான கேள்விப்பத்திர சாதனங்கள் வழங்கப் படும்.

செயலாளர்,
இலங்கை போக்குவரத்துச் சபை.

1960 ம் ஆண்டு ஆகஸ்டு மீ 18 ந உ.

---

## இலங்கை மிருகக் காட்சிச் சாலை

### மிருக உணவுகள் கொடுத்தலுக்கு விண்ணப்பங்கள், 1960/61

1960 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ந் திகதி தொடங்கி 1961 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ம் திகதிவரை தெஹிவலை மிருகக்காட்சிச்சாலைக்கு கீழ்க்காணும் மிருக உணவுகள் கொடுத்தலுக்கு 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14 ந் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிவரை போக்குவரத்து மாராமத்து அமைச்சின் விண்ணப்பச் சபைத் தலைவரால் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| *(1) மிருக உணவுகள் (எறக்குறைய) | | .. | 320,000 | றுத்தல் |
| (2) காய்கறி பழவகைகள் | ,, | .. | 141,000 | ,, |
| (3) மீன் | ,, | .. | 23,350 | ,, |
| (4) இலைகுழை வகைகள் | ,, | .. | 7,500 | அந்தர் |
| (5) புல் வகைகள் | ,, | .. | 7,500 | ,, |
| (6) இறைச்சி வகைகள் | ,, | .. | 109,500 | றுத்தல் |
| (7) பலவகை உணவுகள் | ,, | .. | 15,000 | ,, |

*மிருக உணவுகளின் மாதிரிகள் தகுந்த கலன்களில் அடைக்கப்பட்டு 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 13 ம் திகதி செவ்வாய்க்கிழமை நடுப்பகல் 12 மணிக்கு முன் மிருகக்காட்சிச்சாலை அதிபரிடம் ஒப்படைக்கப் படவேண்டியது மிகவும் அவசியம்.

2. மிருகக்காட்சிச்சாலை அதிபரிடம் இருந்து பெறும் பத்திரங்களில் விண்ணப்பங்கள் இரட்டையாய் ஒப்புவிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு உண வுப் பொருட்களுக்கும் வெவ்வேறு பத்திரங்கள் ஒப்புவிக்கப்படவேண்டும். விண்ணப்பப் பத்திரங்களை சீல் வைக்கப்பட்ட உறைகளில்போட்டு உறை களின் இடதுபக்க மூலையில் மிருக உணவு அல்லது காய்கறி பழவகைகள் அல்லது வேறு உணவுகளுக்கான விண்ணப்பப்பத்திரம் என்று குறிக்கப் பட்டு கீழ் காணும் விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும். விண்ணப்பப் பத்திரச் சபைத் தலைவர், போக்குவரத்து மராமத்து அமைச்சு, திருன்ஸ் வேக்ஸ் ஹவுஸ், கொழும்பு 1, விண்ணப்பப்பத்திரங்களில் ஏதும் திருத்தங்கள் மாற்றங்கள் இருந்தால் அவை விண்ணப்பக்காரரின் கையொப்பத்தால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பப் பத்திரங்கள் பெறுமுன் கொழும்புக் கச்சேரியில் ரூபா ஐம்பது (ரூ. 50/-) கட்டி அதற்குரிய பற்றுச்சீட்டு மிருகக்காட்சிச் சாலை அதிபரிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

4. விண்ணப்பப்பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். தபால் மூலம் அனுப்ப விரும்பாவிடில் விண்ணப்பக்காரர் அல்லது அவருடைய பிரதிநிதி விண்ணப்பப் பத்திரச் சபைத் தலைவரிடம் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட போக்குவரத்து மாரமத்து அமைச்சிலுள்ள அதிகாரியிடம் நேர்முகமாகக் கொடுத்து பற்றுக் சீட்டுப் பெற வேண்டும்.

5. ஒரு அல்லது எல்லா விண்ணப்பப்பத்திரங்களையும் காரணங் காட்டாது நிராகரிக்க அரசாங்கத்திற்கு உரிமையுண்டு. இவ்வறிவித்தலில் கூறப்பட்டிருக்கும் விதிகள் யாவும் அனுசரிக்கப்பட்டாலன்றி எந்த விண்ணப்பப்பத்திரமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. விண்ணப்பப்பத்திரங்கள் 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு போக்குவரத்து மாராமத்து அமைச்சு, விண்ணப்பப்பத்திர சபைத் தலைவரின் அலுவலகத் தில் (திருன்ஸ் வேக்ஸ் ஹவுஸ், கொழும்பு 1) திறக்கப்படும் விண்ணப்பக் காரர்கள் அத்தருணத்தில் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

7. விண்ணப்பக்காரர் அவரது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று அறிவிக்கும் கடிதம் கிடைத்த 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் செய்து கொள்ளாவிடில் அல்லது தேவையான பிணைப்பணம் கட்டாவிடில் அவரால் கட்டப்பட்ட விண்ணப்பப் பத்திரப் பணம் பறிமுதல் செய்யப் படும். விண்ணப்பப் பத்திரங்கள் முடிந்த திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்கு விண்ணப்பக்காரர்கள் தாங்கள் விண்ணப்பித்த பிரகாரம் ஏற்கத் தயாராயிருத்தல் வேண்டும். விண்ணப்பக்காரரின் தவறால் ஏற் படும் நஷ்டம் அவரிடமிருந்து அறவிடப்படும். அதோடு அவரின் பெயரும் தவறிய விண்ணப்பக்காரரின் பட்டியலில் சேர்க்கப்படும்.

8. இதுபற்றிய வேறு விபரங்கள் கீழ்க் கையொப்பமிட்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

A. N. வைமன்,
அதிபர்.

இலங்கை மிருகக்காட்சிச்சாலை,
தெஹிவலை, 21.8.1960.

---

## தபாற் தந்திப் பகுதி

### மூன்று மோட்டார் வாகனங்கள் அளிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்

இப்பகுதி அளிக்கும் நியமனங்களுக்கிணங்க மூன்று மோட்டார் வாகனங் களை அளிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள், மோட்டார் வியாபாரிகளிட மிருந்து 1960 ம் ஆண்டு புரட்டாதி மாதம் முதலாந்திகதி மு.ப. 9.30 மணிவரை கொழும்பு பிரதம தபாற் கந்தோர்த் தபாற் தந்திதலைமை அதிபதியால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் கொழும்பு மத்திய தந்திக் கந்தோர் தந்தித் தெலிபோன் பிரதான இஞ்சினியரிடமிருந்து பெற்ற பத்திரங்களில் (இரட்டைப் பிரதிகளில்) அனுப்பப்படல் வேண்டும். கொழும்பு, மத்திய தந்திக் கந்தோர் தந்திக் காசாளரிடம் கேள்விப் பொறுப்புப் பணமாக ரூபா 100 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பவர்களுக்கே கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு ஆவணி மாதம் 31 ந் திகதி பி.ப. 4 மணிவரை வழங்கப்படும்.

4. ஒப்பந்தத்தை முறைப்படி நிறைவேற்றுவதற்காக, தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் கேள்விப்பத்திர மதிப்பில் 5 வீதத் தொகையை, தபாற் தந்தித் தலைமை அதிபதியிடம் காசாகப் பிணைப்பணம் கட்டவேண்டப்படுவதுடன் ஒப்பந்தத்திற் சேரும்போது உடன்படிக்கையில் முத்திரைச்சட்டப்படி முத்திரைகளை ஒட்டவும் கடமைப் பட்டவராவர்.

5. 1960 ம் ஆண்டு புரட்டாதி மாதம் முதலாந் திகதி மு.ப. 10 மணிக்கு கொழும்பு பிரதம தபாற் கந்தோர், தபாற் தந்தித் தலைமை அதிபதி காரியாலயத்தில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள் விப்பத்திர விண்ணப்பதாரர் சமூகமளிக்கலாம்.

எச். ஈ. செனவிரத்ன,
தபாற் தந்தித் தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர், கொழும்பு 1,
1960 ம் ௵ ஓகஸ்டு ௴ 19 ந உ.

# பொருட்கள் விற்பனையும், பிறவும்

## ஏலவிற்பனை

மேலதிகமானதும் பழுதடைந்ததுமான தட்டச்சுப்பொறி (டைப் ரைட்டர்), சைக்கிள், மோட்டார் பாகங்கள், கந்தோர் பாவனைப் பொருட்களும் மற்றும் ஏனைய பொதுப்பாவிப்புக்குரிய பொருட்களும் 1960 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 2 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மட்டக்குளி 346 ம் இல. பர்கசன் வீதியில் உள்ள பொருட் கொள்வனவுப் பகுதியின் “ தோபே ஸ்டோர்ஸ் ” ல் ஓர் ஏல விற்பனை நடத்தப்படும். பொருட்களின் விபரமடங்கிய அட்டவணைகள் 188 ம் இல. வக்சோல் வீதியிலுள்ள பொருட் கொள்வனவுப் பகுதிக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஏலமிடப்படும் ஏனைய பொருட்களையும் 1960 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1 ம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை மேற் கூறிய ஸ்டோரில் பரிசீலனை செய்யலாம்.

2. கொள்வனவு செய்யும் பொருட்களை உடனே அதன் முழுப் பெறுமதியையும் ரொக்கமாகக் கொடுத்து அன்றே எடுத்துச் செல்ல வேண்டும்.

தி. இராஜதுரை,
(பதில்) கொமிஷனர், பொருட் கொள்வனவுப் பகுதி.

தபால் பெட்டி இல. 147,
கொழும்பு, 1960 ௵ ஆகஸ்டு ௴ 18 உ,

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.